අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education**

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

**දුරකථන**/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832

ලේකම් / செயலாளர் / Secretary } 2784811

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50
**Fax**: 2784846

ඊමේල්/ஈ–மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

පාඩසාලை செயற்பாடுகள்,தனியார் பாடசாலைக் கிளை

මගේ අංකය / எமது இல. / My No. } BD/01/12/06/15/01

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..................................

දිනය / திகதி / Date } 2006.03.07

**சுற்றுநிருப இல: 2006\09.**

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல அதிபர்களுக்கு,

## இடைநிலை வகுப்புகளுக்கான (6-11) புதிய பாடவிதானங்களை அமுல்படுத்தல்

பாடசாலைப் பாடவிதானம் சமகால தேவைக்கமைய மறுசீரமைக்கப்பட வேண்டும். எனவே கல்வி அமைச்சு, தேசிய கல்வி ஆணைக்குழுவினதும் தேசிய கல்வி நிறுவனத்தினதும் பரிந்துரையுடன் 2007ஆம் ஆண்டு தொடக்கம் இச்சுற்றுநிருபத்திற்கமைய பாடவிதான மறுசீரமைப்பை அறிமுகப்படுத்த தீர்மானித்துள்ளது.

2005.09.28ம் திகதியினையும் இல 2005/30 தினையும் கொண்ட "இடைநிலை வகுப்புகளுக்கான (6-11) புதிய பாடவிதானத்தினை அமுல்ப்படுத்தல்" எனும் சுற்றுநிருபத்தினை விஞ்சி இச்சுற்றுநிருபம் கீழ் வருமாறு நடைமுறைக்கு வருகின்றது.

இச் சுற்றுநிருபத்தின் விதிமுறைகளுக்கமைய 2007ஆம் ஆண்டில் 6ஆம்,10ஆம் தரங்களிலும், 2008ஆம் ஆண்டில் 7ஆம்,11ஆம் தரங்களிலும் 2009ஆம் ஆண்டில் 8ஆம் தரத்திலும் 2010ஆம் ஆண்டில் 9ஆம் தரத்திலும் இச்சுற்றுநிருபம் அமுல்படுத்தப்படல் வேண்டும். மேலும், பழைய பாடவிதானம் (99/45 சுற்றுநிருபமும் அதற்கான திருத்தங்களும்) 2007ஆம் ஆண்டில் 7,8,9 மற்றும் 11ஆம் தரங்களிலும் 2008ஆம் ஆண்டில் 8ஆம்,9ஆம் தரங்களிலும் 2009ஆம் ஆண்டில் 9ஆம் தரத்திலும் அமுலில் இருக்கும். இது கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணை மூலம் விபரிக்கப்பட்டுள்ளது

| ஆண்டு | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|
| 2007 | NS | OS | OS | OS | NS | OS |
| 2008 | NS | NS | OS | OS | NS | NS |
| 2009 | NS | NS | NS | OS | NS | NS |
| 2010 | NS | NS | NS | NS | NS | NS |

NS - புதிய பாடத்திட்டம் (2006/09 ற்கு ஏற்ப)
OS - பழைய பாடத்திட்டம் (1999/45 ற்கு ஏற்ப)

மேற்கூறப்பட்டவாறு பாடசாலை நேரசூசி தயாரிக்கப்பட வேண்டியதுடன் 2010ஆம் ஆண்டில் சகல இடைநிலை தரங்களுக்காகவும் இச்சுற்றுநிருபத்திற்கமைய பாடசாலை நேரசூசி தயாரிக்கப்பட வேண்டும். 2007ம் ஆண்டு முதல் பாடசாலைகளில் அமுல்படுத்தப்படும் இப்புதிய பாடவிதானத்தை கற்கும் மாணவர்கள் முதற் தடவையாக 2008ஆம் ஆண்டில் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றுவார்கள்.

## 2.0 கனிஷ்ட இடைநிலைத் தரம் (6 - 9)

கனிஷ்ட இடைநிலை பிரிவு மாணவர்கள் கற்க வேண்டிய பாடங்கள் மற்றும் அதற்காக ஒதுக்கப்பட வேண்டிய பாடவேளைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அமைகிறது.

### 2.1 ஒவ்வொரு பாடத்திற்கும் பாடவேளைகள் ஒதுக்கப்பட வேண்டிய முறை (வாரத்திற்கு)

| தொ. இல | பாடம் | வாரமொன்றிற்கு ஒதுக்கப்படும் பாடவேளைகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | தரம் 6 | தரம் 7 | தரம் 8 | தரம் 9 |
| 01. | சமயம் (பௌத்த சமயம் / கிறிஸ்தவ சமயம் / கத்தோலிக்க சமயம் / சைவநெறி/ இஸ்லாம்) | 2 | 2 | 2 | 2 |
| 02. | சிங்கள மொழியும் இலக்கியமும். / தமிழ் மொழியும் இலக்கியமும் | 5 | 5 | 5 | 5 |
| 03. | ஆங்கிலம் | 5 | 5 | 5 | 5 |
| 04. | கணிதம் | 5 | 5 | 5 | 5 |
| 05. | விஞ்ஞானம் | 5 | 5 | 5 | 5 |
| 06. | வரலாறு | 2 | 2 | 2 | 2 |
| 07. | புவியியல் | 2 | 2 | 2 | 2 |
| 08. | வாழ்க்கைத் தேர்ச்சி | 2 | 2 | 2 | 2 |
| 09. | ☆ அழகியற் பாடமொன்று | 3 | 3 | 3 | 3 |
| 10. | பிரயோக , தொழினுட்ப திறன் | 3 | 3 | 3 | 3 |
| 11. | சுகாதாரமும் உடற்கல்வியும் | 2 | 2 | 2 | 2 |
| 12. | இரண்டாம் மொழியாக சிங்களம் /தமிழ் | 2 | 2 | 2 | 2 |
| 13. | நூலகப் பயன்பாடு | 1 | 1 | 1 | 1 |
| | ❖ ஒதுக்கப்படாத பாடவேளைகள் | 1 | 1 | 1 | 1 |
| | மொத்தம் | 40 | 40 | 40 | 40 |

☆ அழகியற் பாடங்கள் பிரிவு 3.2.2 இல் குறிப்பிடப்படும் பாடங்களாகும்.

❖ ஒதுக்கப்படாத பாடவேளை, பாடசாலையின் முகாமைத்துவ சபையினால் தீர்மானிக்கப்படும் பாடங்கள், கற்கைச் செயற்பாடுகள், விளையாட்டு, மாணவர்மன்றம் போன்ற இணைப்பாடவிதான செயற்பாடுகள் போன்றவற்றிற்காக பயன்படுத்திக் கொள்ள முடியும்.

## 3.0 சிரேஷ்ட இடைநிலைத் தரம் (10 -11)

புதிய பாடவிதானம், கட்டாயப் பாடங்கள் எனவும் தொகுதிப் பாடங்கள் எனவும் இரு பகுதிகளைக் கொண்டது. கட்டாயப் பாடங்கள் 06 ஆகும். தொகுதிப் பாடங்கள் தொகுதிகள் 03 இன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதோடு அம் 03 தொகுதிகளிலிருந்தும் ஒரு தொகுதியிலிருந்து ஒரு பாடம் வீதம் 3 பாடங்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். இதன்படி அனைத்து மாணவர்களும் கட்டாயப் பாடங்கள் 06 இனையும் தொகுதிப் பாடங்கள் 03 இனையும் சேர்த்து எல்லாமாக 09 பாடங்களைக் கற்றல் வேண்டும்.

### 3.1 கட்டாயப் பாடங்கள்

அனைத்து மாணவர்களும் இப்பாடங்கள் 06 இனையும் கற்றல் வேண்டும்.

1. சமயம் (பௌத்த சமயம் /கிறிஸ்தவ சமயம் / கத்தோலிக்க சமயம் / சைவநெறி /இஸ்லாம்)
2. சிங்கள மொழியும் இலக்கியமும் /தமிழ் மொழியும் இலக்கியமும்
3. கணிதம்
4. ஆங்கிலம்
5. வரலாறு
6. விஞ்ஞானம்

## 3.2 தொகுதிப் பாடங்கள்

கீழ் குறிப்பிடப்படும் பாடத் தொகுதிகளில் ஒரு தொகுதியில் இருந்து ஒரு பாடத்தை மட்டுமே தெரிவுசெய்தல் வேண்டும்.

### 3.2.1 பாடத் தொகுதி 1

1. புவியியல்
2. குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம்
3. முயற்சியாண்மைக் கற்கை
4. செம்மொழிகளும் நவீன மொழிகளும் (பாளி/ சமஸ்கிருதம்/ பிரெஞ்சு/ ஜெர்மன் / ஹிந்தி/ ஜப்பான்/ அரபு)
5. இரண்டாம் மொழியாக தமிழ் /சிங்களம்

### 3.2.2 பாடத் தொகுதி - 2

1. சங்கீதம் (மேலைத்தேய/ கீழைத்தேய/ கர்நாடகம்)
2. சித்திரம்
3. நடனம் ( சுதேஷ /பரதம்)
4. நாடகமும் அரங்கியலும் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
5. இலக்கியநயம் (சிங்களம் / தமிழ் /ஆங்கிலம்/ அரபு)

### 3.2.3 பாடத் தொகுதி - 3

1. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
2. விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும்
3. கடற்றொழிலும் உணவுத் தொழில்நுட்பமும்
4. ஆக்கத்திறனும் தொழில்நுட்பவியலும்
5. கலை
6. மனைப்பொருளியல்
7. மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும்
8. சுகாதாரமும் உடற்கல்வியும்
9. தொடர்பாடல், ஊடகக் கற்கை

## 3.3 பாடங்களுக்காக பாடவேளை ஒதுக்க வேண்டிய முறை (வாரத்திற்கு)

| தொ. இல | பாடம் | வாரமொன்றுக்கு ஒதுக்கப்பட வேண்டிய பாடவேளைகள் | |
|---|---|---|---|
| | | தரம் 10 | தரம் 11 |
| 01 | சமயம் (பௌத்த சமயம் / கிறிஸ்தவ சமயம் / கத்தோலிக்க சமயம் / சைவநெறி / இஸ்லாம்.) | 2 | 2 |
| 02 | சிங்கள மொழியும் இலக்கியமும் /தமிழ் மொழியும் இலக்கியமும் | 5 | 5 |
| 03 | கணிதம் | 6 | 6 |
| 04 | ஆங்கிலம் | 5 | 5 |
| 05 | வரலாறு | 3 | 3 |
| 06 | விஞ்ஞானம் | 6 | 6 |
| 07 | பாடத்தொகுதி 1 இல் ஒரு பாடம் | 3 | 3 |
| 08 | பாடத் தொகுதி 2 இல் ஒரு பாடம் | 3 | 3 |
| 09 | பாடத் தொகுதி 3 இல் ஒரு பாடம் | 3 | 3 |
| 10 | நூலகப் பாவனை | 1 | 1 |
| | ☆ ஒதுக்கப்படாத பாடவேளைகள் | 3 | 3 |
| | மொத்தம் | 40 | 40 |

☆ ஒதுக்கப்படாத பாடவேளைகள் 03 இல் ஒரு பாடவேளையை உடற்கல்விக்கு ஒதுக்க வேண்டியதோடு, மீதமாகவுள்ள பாடவேளைகளை பாடசாலையின் முகாமைத்துவச் சபையினால் தீர்மானிக்கப்படும் பாடங்கள், கற்கைச் செயற்பாடுகள், விளையாட்டு மாணவர்மன்றம் போன்ற இணைப்பாடவிதான செயற்பாடுகள் போன்றவற்றிக்காக பயன்படுத்திக் கொள்ள முடியும்.

**4.0** 4.1 இவ் வகுப்புகளில் கற்பிக்கையில் பாடத்திட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய ஆலோசனைகளுக்கேற்ப செயற்றிட்ட, செயல்முறைப் பயன்பாடு குறித்து விஷேட கவனம் செலுத்துதல் வேண்டும்

4.2 இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்படும் பாடங்களுக்கான பாடத்திட்டங்கள் தேசிய கல்வி நிறுவனத்தின் மூலம் தயார் செய்யப்படவேண்டியதோடு, அப்பாடங்களுக்கு உரிய பாடப் புத்தகங்கள் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மூலம் உரிய வருடத்திற்கு முன்பாக பாடசாலைகளுக்குப் பெற்றுக் கொடுக்க வழிவகை செய்யப்படும்.

4.3 6-11 வரையான வகுப்புகளில், பாடங்களுக்காக வாரத்திற்கு ஒதுக்கப்பபட்டுள்ள பாடவேளைகளுக்கேற்பவும் உரிய அன்றாடச் செயற்பாடுகள் (விஷேடமாக உடற் பயிற்சி வேலைத்திட்டம்) உட்படவும் நேரசூசி தயார் செய்யப்பட்டு அதன்படி நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

ஆரியரத்ன ஹேவகே
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள்:

1. தலைவர் - பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சபை - (அ.கொ.பொ)
2. தலைவர் - தேசிய கல்வி ஆணைக்குழு - (அ.கொ.பொ)
3. பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவம் - (தே.ந.)
4. பரீட்சை ஆணையாளர் நாயகம் -பரீட்சைத் திணைக்களம் - (தே.ந.)
5. கல்வி வெளியீட்டு ஆணையாளர் - கல்வி வெளியீட்டு திணைக்களம் - (தே.ந.)